**தலைப்பு 110 - நீதி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 110 – நீதி அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட:டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம்முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(அ)** இந்த அறிக்கையின் 1.6.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

**(ஆ)** முன்னைய ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 1102 இலக்க வெளிநாட்டு பயண செலவு விடயத்திற்கு ஆண்டிற்குள் மாற்றங்கள் ரூபா 106,497 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றில் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க செலவுக்கூற்றின் ஏசீஏ-2(i) படிவத்தில் அது ரூபா 115,497 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக தேறிய நிதி ஏற்பாடு ரூபா 9,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் 1102 ஆம் இலக்க வெளிநாட்டுப் பணய செலவு விடயத்திற்கு ரூபா 20,497 தொகையான நிதி ஏற்பாட்டிற்காக ரூபா 29,497 நிதி ஏற்பாடு தவறுதலாக பதியப்பட்டதனால் உரிய செலவு விடயத்தின் தேறிய நிதி ஏற்பாடும் மிகுதி நிதி ஏற்பாடும் ரூபா 9,000 அதிகரித்து பதியப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ii) | 110-01-2-19-1509 ஆம் இலக்க நட்டயீட்டுக்கான அலுவலகம் செலவு விடயத்திற்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் ரூபா 69,871,547 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றின் | நிதிக்கூற்றில் நட்டயீட்டிற்கான அலுவலகத்தின் 110-01-02-19-1509 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக நி.பி 66 | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க நிதிக்கூற்றின் ஏசீஏ-2(i) படிவத்தில் அது ரூபா 69,880,547 ஆக காட்டப்பட்டதன் காரணமாக தேறிய நிதி ஏற்பாடும் சேமிப்பும் ரூபா 9,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இன் மூலம் நிதி ஏற்பாட்டினை மாற்றுதல்களின் மொத்தம் ரூபா 69,880,547 ஆகும். இதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,654,547 தொகையானது நிதி ஏற்பாட்டினை மாற்றுதல் ரூபா 1,645,547 ஆக இருத்தல் வேண்டும். எனவே உரிய செலவு விடயத்தின் தேறிய நிதி ஏற்றாடும் சேமிப்பும் ரூபா 9,000 ஆல் குறைத்து பதியப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற’ றுகள்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்ணங்கள் ‘‘பி” கணக்கின் தனித்தனி மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்புக்களின் மொத்தம் ரூபா 86,065,992 ஆக இருந்த போதிலும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 86,058,364 ஆகும். அதற்கிணங்க ரூபா 7,628 வித்தியாசத்தினை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகங்களில் சம்பளத்தினைப் பெறுகின்ற உத்தியோகத்தர்களின். கடன் மீதிகளில் சில வித்தியாசங்கள காணப்பட்டன. எனவே மேற்கூறிய கடன் மீதிகளில் அடங்கியுள்ள குறைபாடுகளையும் சரிசெய்து துரிதமாக தனிதனியாக மீதிகளின் பிழைகளை சரிசெய்வதாக தெரிவிக்கப்பட்டது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க அலுவலக கட்டிடங்களின் நடைமுறை வேலை மீதி ரூபா 1,019,215,858 ஆக இருந்த போதிலும் 2022 சனவரி 01 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் அறிக்கையில் அது ரூபா 1,797,891,147 ஆக ரூபா 778,675,289 அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | 06/2022 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் நீதி அமைச்சின் இராஜாங்க அமைச்சு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நீதி அமைச்சின் செலவு விடயமான 110 இன் கீழ் இராஜாங்க அமைச்சின் சொத்:துக்களை செம்மையாக்கல் செய்யும் போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் இராஜாங்க அமைச்சு தொடர்பாக நேரடியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது ளுயு 82 இற்கு இணங்க 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,797,891,147ஆகக் காட்டப்பட்டிருந்தது. செம்மையாக்கல்களை மேற்கொள்ளும் போது கொள்வனவுகளின் பெறுமதிகள் ரூபா 778,675,289 ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | செம்மையாக்கல்கள் மேற்கொள்ளும் போது பிழைகளை சரிசெய்து நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் நடைமுறை வேலைச் செலவுகள் ரூபா 778,675,289 தொகை கொள்வனவுகளாக SA82 அறிக்கையில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ரூபா 778,675,289 தொகையான கொள்வனவுகள் ஆரம்ப மீதியாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் 06/2022 ஆம் இலக்க சுற்றிக்கையின் | செம்மையாக்கல்களை மேற்கொள்ளும் போது பிழைகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் இராஜாங்க அமைச்சின் சொத்துக்களை செம்மையாக்கும் போது SA82 படிவத்தில் ஆரம்ப திகதியில் உள்ளடக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (iii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட போக்குவரத்து உபகரணங்களின் மீதி ரூா 473,445,200 ஆக இருந்த போதிலும் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அது ரூபா 635,701,008 ஆக முன்கொண்டு வரப்பட்டதன் காரணமாக ரூபா 162,255,808 அதிகரித்து நிதியற்ற சொத்துக்கள் அறிக்கையின் SA82 ஆம் இலக்க படிவத்தில் காட்டப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து உபகரணங்களின் மீதி ரூபா 473,445,200 ஆகும். 06/2022 ஆம் இலக்க சுற்றிக்கைக்கு இணங்க நீதி அமைச்சின் கீழ் இராஜாங்க அமைச்சு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நீதி அமைச்சின் செலவு விடயமான 110 இன் கீழ் இராஜாங்க அமைச்சின் சொத்துக்களை செம்மையாக்கல் மேற்கொள்ளும் போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் இராஜாங்க அமைச்சு தொடர்பாக நேரடியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது SA82 இற்கு இணங்க 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 635,701,008 ஆகக் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க ரூபா 162,255,808 வித்தியாசமானது இராஜாங்க அமைச்சும் புனரமைப்பு ஆணையாளர் அலுவலகமும் மீதிகளை செம்மையாக்கியதன் மூலம் இடம்பெற்றுள்ள வித்தியாசம் என தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 88,986,311 ஆக இருந்த போதிலும் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அது ரூபா 214,722,994 ஆக ரூபா 125,736,683 அதிகரித்து நிதியற்ற சொத்துக்களின் அறிக்கையில் SA82 ஆம் இலக்க படிவத்தில் காட்டப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 88,986,311 ஆகும். 06/2022 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் நீதி அமைச்சின் கீழ் இராஜாங்க அமைச்சு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நீதி அமைச்சின் செலவு விடயமான 110 இன் கீழ் இராஜாங்க அமைச்சின் சொத்துக்களை செம்மையாக்கல் செய்யும் போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் இராஜாங்க அமைச்சு தொடர்ாக நேரடி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது SA 82 இற்கு இணங்க 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 214,722,994 ஆக காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க ரூபா 125,736,683 வித்தியாசமானது இராஜாங்க அமைச்சும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவலகமும் மீதியை செம்மையாக்கியதன் மூலம் ஏற்பட்டுள்ள வித்தியாசம் என தெரிவிக்கப்பட்டது. | செம்மையாக்கல்களை மேற்கொள்ளும் போது பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நீதி அமைச்சினால் 2007 இலிருந்து 2010 வரையான காலத்தில் ரூபா 374,119,204 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட சட்ட வரைபாக்கல் திணைக்களத்தினால் பயன்படுத்துகின்ற கட்டிடத்தினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்குரியதான ஆதனங்கள் சம்பந்தமான உரிமையை உறுதிபபடுத்துகின்ற ஆவணங்களைச் சமர்ப்பிக்காது அந்த ஆதனங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கையினை | காணியின் சட்டரீதியான உரிமையை பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்க முடியாது என மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே உரிய காணியின் சட்டரீதியான உரிமையை இந்த அமைச்சுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அக்காணியினதும் கட்டிடத்தினதும் மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கும் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்ற உடன் அப்பெறுமதியை CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்** | | |
| நிதிப்பிரமாணம் 1645 (அ) இன் பிரகாரம் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மீளமைப்பு அலுவலகத்திற்கு 04 வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப் பேணப்பட்டிருக்கவில்லை. | அமைச்சில் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பு புத்தகம் நாளதுவரையாக பேணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | பொது 267 படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் ஒவ்வொரு வாகனம் சம்பந்தமாகவும் பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 110-1-4-6-2202 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் உள்நாட்டு நிதிகளிலிருந்து ரூபா 50,000,000 தொகையும் வெளிநாட்டு நிதிகளிலிருந்து சார்ந்த கிரயத்திற்காக ரூபா 1,000,000 தொகையும் ஒதக்கீடு செய்யப்பட்டிருந்தும் அந்த நிதி ஏற்பாடு முழவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | யாழ்ப்பாண மாவட்டத்தில் மழை நீர் தாங்கிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் புரிந்துணர்வு உடன்படிக்கையானது இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்குமிடையே 2017 ஆம் ஆண்டின் சனவரி 13 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது. எனினும் 2022-12-31 ஆந் திகதி வரை உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்கு உரிய உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதனால் செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளது. எனவே நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | புரிந்துணர்வு உடன்படிக்கை காலத்தை நீடித்ததன் பின்னர் நிதி ஏற்பாட்டினை ஒதக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 110-1-2-19-2201 ஆம் இலக்க மூலதன செலவு விடயத்திற்காக நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 50,000 நிதி ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டில் இடம்பெற்ற மின்சார துண்டிப்பின் அடிப்படையில் மின்சாரத்தை மட்டுப்பாட்டுடன் பயன்படுத்தியதன் காரணமாக வாயு சீராக்கி இயந்திரங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டன. எனினும் நட்டயீட்டு நிறுவனம் அமைந்துள்ள கட்டிடத்தில் கடமைகளை மேற்கொள்ளும் போது காணப்பட்ட அசௌகரியத்திற்காக 04 மின்சார விசிறிகளை கொள்வனவு செய்வதற்காக இந்த நிதி ஏற்பாடு மாற்றிக்கொள்ளப்பட்டிருந் | நடைமுறை நிலைமையை கருத்தில் கொண்டு நிதி ஏற்பாட்டினை மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தும் திறைசேரியிடமிருருந்து மூலதனச் செலவுகளுக்காக கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக அந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 3(xvii) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் நிதி மாற்றிக்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் 08 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 28,413,992 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்த மாற்றம் செய்யப்பட்ட செலவு விடயத்தில் ரூபா 23,787,632 சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு சதவீதமாக 8 சதவீதத்திற்கும் 43 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடு எல்லைக்குள் செலவுகளை முகாமைத்துவம் செய்யுமாறு BD/JLE/110/05 202 ஆம் இலக்க 2022-08-16 ஆந் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே காலம் தாழ்த்த முடியாத மற்றும் அத்தியவசியமான கொடுப்பனவுகளுக்காக நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்காக நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்பார்க்கப்பட்டவாறு கொடுப்பனவு செய்யப்படாததனால் நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்ட நிதி ஏற்பாடு சில சந்தர்ப்பங்களில் சேமிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சரியான திட்டத்திற்கு இணங்க செயற்பாடுகளை நிறைவேற்றும் இயலுமையின் அடிப்படையில் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 20 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 524,760,000 மொத்த தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | 03/2022 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டிருந்ததனால் அரசாங்க செலவுகளை மிகவும் அத்தியவசியமான சேவைகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்தியதன் காரணமாக உரிய செலவு விடயங்களில் நிதி ஏநற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. எனவே மூலதன செலவு விடயங்களான | நடைமுறை நிலைமையை கருத்தில்கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடங்கள், நிர்மாணங்கள், புனரமைத்தலும் மேம்படுத்தலும், இயந்திரங்களும் உபகரணங்களும் என்பவற்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற (2001, 2103, 2002, 2003) செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு அவ்வாறே சேமிப்பாகி இருந்தது என தெரிவிக்கப்பட்டது. | |
| (உ) | களுதொட கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்ட உணவுச்சாலைக்கு அமைச்சு உத்தியோகத்தர்களுக்காக 24 கதிரைகள் (Dining Chair) முறையே 2022-03-24 மற்றும் 2022-04-06 ஆகிய திகதிகளில் ரூபா 71,712 மற்றும் ரூபா 14,342 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மொத்த செலவு ரூபா 86,054 ஆகும். இக்கொள்வனவு அமைச்சு அலுவலகத்திற்குரிதான 110-1-1-2102 செலவு விடயத்திற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக அதில் ரூபா 50,198 தொகை தேசிய ஒருங்கிணைந்த மேம்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் 110-1-5-2102 செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஒரே நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டங்களுக்கிடையே நிதி ஏற்பாட்டினை மாற்றுவதற்கு திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் 2022 ஆம் ஆண்டில் காலாண்டு அடிப்படையில் கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதனால் 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் போது மேலதிக நிதி ஏற்பாடு மற்றும் மாற்றல்களுக்காக அரசாங்க பாதீட்டு திணைக்களத்தினால் அனுமதி வழங்குதல் இடம்பெற்றிருக்காததுடன் காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டிற்குள் செலவுகளை முகாமைத்துவம் செய்யுமாறு அரசாங்க பாதீட்டு திணைக்களத்தினால் வாய்மொழி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதனாலும் சரியான செலவு விடயத்திற்கு கணக்கீடு செய்யப்படாது 110-01-05-2102 செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்தல் இடம்பெற்றதானது உணவுச்சாலைக்கு அப்பொருட்கள் அத்தியவசியமானது என்பதனால் அமைச்சின் அனைத்து பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக பொதுவாக சேவைகள் வழங்கப்படுவதனால் அந்த அந்த செயற்திட்டங்களுக்குரிய உத்தியோகத்தர்களினாம் | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வசதிகள் பயன்படுத்தப்படுவதனாலும் இச்செலவுகளின் ஒரு பகுதியை அச்செலவு விடயத்திற்கு வரவு வைத்தலினை நியாயப்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் அதற்கிணங்க நி.பி 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை மாற்றுதல் இடம்பெறவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமைக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஊ) | சற்றுலா பங்களாவிற்காக அறைகளை வெப்பமாக்கும் 03 உபகரணங்கள் 2022 திசெம்பர் 20 ஆந் திகதி ரூா 90,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 110-01-02-2102 செலவு விடயத்தில் நிதி ஏற்பாடு இல்லாமையால் 110-01-01-2102 செலவு வடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதற்காக நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | ஆண்டின் இறுதியில் சுற்றுலா பங்களாவின் தேவைப்பட்டின் அடிப்படையில் அறைகளை வெப்பமாக்கும் 03 உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்டது. அவ்வாறே நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் மாத்திரம் பொறுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்பதனால் மாற்றல் மேற்கொள்ளப்படாததுடன் மேற்கூறியவாறு இந்த வசதிகளும் அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களினாலும் பயன்படுத்தப்படுவதனால் நிதி ஏற்பாடு காணப்படுகின்ற செலவு விடயத்திற்கு வரவுவைக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு உரிய நி.பி 66 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. | செலவு செய்வதற்கு முன்னர் நிதி ஏற்பாட்டினை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ரூபா 1,956,653 மொத்த தொகையான செலவுகள் உரிய செலவு விடயங்களுக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக நீதி இல்லத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 110-1-2-2104(22) ஆம் இலக்க செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கணக்குகளில் காட்டப்பட்டுள்ள நடைமுறை வேலை பெறுமதி ரூபா 1,956,652 ஆல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. என அவதானிக்கப்பட்டது. இச்செலவுகள் நீதி இல்லத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் சம்பந்தமான செலவு அல்லாததுடன் மூலதனாக்குவதற்கு முடியாத செலவுகள் என மேலும் வெளிப்படுத்தப்பட்டது. | நீதி இல்ல செயற்திட்டத்திற்குரிய நிருவாகச் செலவுகள், ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள், சாரதிகள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய மேலதிக நேர வேலைப்படிகள் 110-01-02-1002 இன் மூலமும் அவை தொடர்பாக பரீட்சிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் 110-01-02-1202 இன் மூலமும் ஏனைய கோவைகளை தயாரிப்பதற்கான A4 கடதாசிகள் மற்றும் எழுதுகருவிகள் கொடுப்பனவு 110-01-02-1201 இன் மூலமும் மேற்கொள்ளப்பட்டதுடன் நிருவாகச் செலவுகள் என இனங்காண்பதற்கு முடியாதுள்ளது. இதில் நிருவாகச் செலவுகளின் மூலம் அச்செலவுகள் உள்ளடக்கப்படுவதனால் காலாண்டு அடிப்படையிலான நிதி ஏற்பாடு 2022-03-31 ஆந் திகதியோடு முடிவடைந்துள்ளதனாலும் அந்த மேலதிக நேர வேலை, எரிபொருள், மற்றும் எழுதுகருவிகள் செலவு விடயங்களை மிகைத்திருந்ததனாலும் நிருவாகச் செலவுகளை மேற்கொள்வதற்காக 0.5 சதவீதம் வரையான உச்ச அளவின் கீழ் மேற்கொள்ளப்படலாம் என்பதனாலும் பின்னர் அச்செலவு விடயங்களுக்காக போதியளவு நிதி ஏற்பாடு இல்லாததனால் உரிய மேலதிக நேர வேலை, எரிபொருள், மற்றும் எழுதுகருவிகளின் விலைப்பட்டியல் 110-01- | உரிய செலவுகள் இச்செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 02-2104 (22) செலவு விடயத்திற்கு வரவுவைக்கப்பட்டு காலாண்டு நிதி ஏற்பாட்டு பற்றாக்குறை பூரணப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் நீதி இல்ல செயற்திட்டத்திற்குரிய விலைப்பட்டியல்கள் பொறியியல் பிரிவின் மூலம் நிருவாகச் செலவுகளை சான்றுபடுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) குறிப்பு (iv) இல் காட்டப்பட்டுள்ள மொத்தமாக ரூபா 1,091,163 தொகையான பொறுப்புக்கள் திறைசேரி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைக்கு (SA92) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பு (iv) இல் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்ததானது 2022 கணக்காண்டு முடிவடைந்ததன் பின்னர் 2023 ஆம் ஆண்டின் போது 2022 ஆம் ஆண்டு தொடர்பாக கிடைத்த விலைப்பட்டியல் என்பதனால் அப்பெறுமதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பொதுத்திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு முடியாதுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | பொறுப்புக்களானது திறைசேரி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைக்கு (SA92) உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மற்றும் இலங்கை மின்சக்தி அமைச்சிற்குச் செலுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத்திற்கான மொத்தமாக ரூபா 716,484 விலைப்பட்டியல்கள் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் மின்சாரப் பட்டியல்களும் நீர்ப்பட்டியல்களும் தாமதித்தே கிடைப்பதனால் பொறுப்புக்களாக உரிய தகவலை அறிக்கையிடுவதற்கு முடியாதுள்ளது. இவ்வாறான தவறினை 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது | பொறுப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இடம்பெறாமல் கவனித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. | |

**2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டி இருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் செய்யப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்க வேண்டி இருந்தும் அவ்வாறான மீளய்வு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கிணங்க அந்த முறைமையை வினைத்திறனாக அமல்ப்படுத்துவதற்குத் தேவைப்படும் வகையில் மாற்றங்கள் செய்வதற்கு அடிக்கடி மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தல் செய்யப்பட்டுள்ளதுடன் அது நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன

| | அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** | | |
| | | **ரூபா** | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 104(1) | - | 2017, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 03 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017, 2019 மற்றும் 2020 ஆம் அண்டுகளுக்குரிய விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | நிதிப்பிரமாணம் 365(3) | 507,377 | கட்டுநிதி பணமானது அதற்கு நிர்ணயிக்கப்பட்ட நிதி ஆண்டினைத் தவிர்ந்த ஏனைய நிதி ஆண்டின் கொடுப்பனவுகளைத் தீர்த்துவைப்பதற்காக ஈடுபடுத்தாதிருக்க வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் நீதி அமைச்சின் புதிய கட்டிடத்திற்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து | வரிப்பண இலக்கம் 80, அதிகரண மாவத்தை, கொழும்பு 12 என்ற விலாசத்தில் அமைந்துள்ள நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தின் தளமாடி தொடர்பாக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2017 ஆம் ஆண்டு வரையான நிலுவை வரிப் பணம் 2022 ஆம் ஆண்டின் 110-1-2-1-1404 செலவு விடய நிதி ஏற்பாட்டின் மூலம் நிதி அமைச்சினால் செலுத்தப்பட்டது. | வரையான நிலுவை வரிப் பணமாக ரூபா 507,377 தொகை 110-01-02-01-1404 செலவு விடயத்தின் மூலம் நீதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நி.பி 115 இன் கீழான அங்கீகாரத்துடனும் கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்தப்பட்டது. இந்த ஆதனத்தின் சட்ட ரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை இடம்பெற்று வருவதுடன் காணி ஆணையாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில் உரிய காலத்தில் பிரதேச செயலகத்தினால் இந்த ஆதனம் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | அரசாங்க நிருவாக சுற்றிக்கை | | | |
| | 2008 யூன் 26 - ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றிக்கையின் 04 ஆம் பந்தி | சுற்றிக்கைக்கு இணங்க ஒவ்வொரு உத்தியோகத்தருக்காகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மேலதிக எரிபொருளின் அளவினை காட்டும் ஒரு பதிவேடு அமைச்சினால் | அமைச்சின் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்காகவும் வழங்கப்படுகின்ற மேலதிக எரிபொருளுக்காக நீதி அமைச்சு செயலாளரின் | அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பேணப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுவதனால் அதற்காக தற்பொழுது ஒரு பதிவேடு பேணப்படாதிருந்தும் மேலதிக எரிபொருளினை வேண்டுகின்ற விண்ணப்ப படிவத்தில் அதுவரை பெற்றுக்கொண்ட மேலதிக எரிபொருளின் அளவு குறிப்பிடப்படுகின்றது. இதற்குப் பின்னர் சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப் பட்டது என தெரிவிக்கப்பட்டது. |

## 2.5 முற்பணங்கள் வழங்கலும் தீர்த்துவைத்தலும்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கியதன் பின்னர் உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் அந்த உபகட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 72 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,375,071 தொகை சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் போது குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கியதன் பின்னர் உரிய செயற்பாட்டினை முடிவுறுத்தி 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்த்துவைக்கபட வேண்டிய போதிலும் 72 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. எனினும் அதில் 16 சந்தர்ப்பங்களின் போது நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையான நாட்களுக்குள் உபகட்டுநிதி தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க உப கட்டுநிதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இதன் போது முற்பணங்கள் பற்றுச்சீட்டுக்களின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்பட்ட போதிலும் தீர்த்துவைத்தல் வவுச்சர்கள் தாமதமாக கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | |
| | எவ்வாறாயினும் அவ்வாறு 10 நாட்களுக்குள் நிர்யிக்கப்பட்டவாறு முற்பணங்களை தீர்த்துவைக்க முடியாதுள்ள சந்தர்ப்பங்கள் உள்ளதுடன் எதிர்காலத்தில் குறித்த செயலுக்கான உப கட்டுநிதிகளை செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உடனடியாக சிறாப்பருக்கச் செலுத்துதல் அல்லது விலைப்பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்காக உரிய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துதல் இடம்பெற்றுள்ளதுடன் 10 நாட்களை மிகைத்த முற்பணங்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி அந்த முற்பணங்களை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நீதி நிருவாகச் சேவையை ஸ்தாபிப்பதற்காக நீதி | நீதி பரப்பெல்லையின் நடவடிக்கைகளை | குழு அறிக்கையினை விரைவாக |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 2020/அமைப/J/L/88 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அவதானிப்புக்களைச் சமர்ப்பித்து நிதி அமைச்சரைப் போல அரசாங்க சேவை, மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் இச்சேவையை தோற்றுவிப்பதனால் உருவாகும் சிக்கல்களைப் போல அச்சேவையை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் தற்பொழுது அரசாங்க சேவையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தும் அதற்காக ஆய்வுசெய்து சிபாரிசினை சமர்ப்பிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு 2023 சனவரி வரை 02 ஆண்டுகள் கடந்திருந்தும் அதற்காக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் குழுக் கூட்டங்களுக்கான அங்கத்துவ படியாக ரூபா 539,675 செலவு செய்யப்பட்டிருந்தது. | செயற்படுத்திச் செல்லும் போது நீதி நிருவாகச் சேவையினை தோற்றுவிப்பதற்கான தேவைப்பாடு உருவாகியுள்ளதனால் அது சம்பந்தமாக ஆய்வு செய்து சிபாரிசினை சமர்ப்பிகப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழு கூடி தகவல்களைக் கோரி ஆய்வுகளை மேற்கொண்டு அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக அங்கத்துவ படி செலுத்தப்பட்டது. குழு அறிக்கையினை முடியுமான அளவு விரைவாக வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் குழுவிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் இன்னும் அந்த அறிக்கை குழுவினால் வழங்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சரவை செயலாளரின் 20/1252/330/001-1 ஆம் இலக்க 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத் தெரிவிக்கும் கடிதத்தினால் கௌரவ நிதி அமைச்சரினால் புதிய அரசியலமைப்பின் வரைபினை தயாரித்து பூரணப்படுத்துவதற்கு உறுதியான ஒரு கால அட்டவணையினை இனங்காணுதல் பொருத்தமானது என பிரேரிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு கால அட்டவணையும் செலவு மதிப்பீடும் தயாரிக்கப்படவில்லை. மேலும் 2020, 2021 மற்றும் 2022 வருடாந்த மதிப்பீடுகளில் முறையே ரூபா 50 மில்லியன், ரூபா 100 மில்லியன், ரூபா 4.7 மில்லியன் ஆக மொத்தமாக ரூபா 154.7 மில்லியன் தொகை தேவைப்பாட்டினை | 20 ஆவது அரசியலமைப்பின் அச்சிடுதல் (Digital Artwork) வேலையினை மேற்கொள்வதற்கு சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டு முன்னைய ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டில் அச்செலவுகளை மிகவும் குறைத்து அரசாங்க அச்சகத்தின் மூலம் மேற்கொண்டதனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. கூட்டங்கள் நடாத்தப்படாததனால் கூட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வாடகைப் பணத்தை உத்தியோகத்தர்களுக்கு | நடைமுறை நிலைமையை கவனித்துப் பார்த்து மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணாது நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததனால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 41,093,108, ரூபா 88,063,094 மற்றும் ரூபா 3,681,742 அல்லது 78 சதவீதத்திலிருந்து 88 சதவீதம் வரையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செலுத்துவதற்கு இருந்த போக்குவரத்து, உபசரிப்பு, பங்குபற்றல் படி என்பவற்றினை செலுத்த வேண்டி ஏற்பட்டிருக்காததனாலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி இலக்கம் 21, மில்ஸ் வீதி, கொழும்பு- 12 என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு தனியார் கம்பனிக்குச் சொந்தமான ஆதனத்தில் 2.4281 ஹெக்டயர் (06 ஏக்கர்கள்) காணியானது காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38 (அ) உப பணிப்புரையின் கீழ் அரசாங்கத்திக்குப் பொறுப்பேற்கப்பட்டு நீதி இல்லத்தினை நிர்மாணிப்பதற்காக 2019-04-11 ஆந் திகதி அக்காணியை பயன்படுத்தும் அதிகாரம் நீதி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு இழப்பீடு செலுத்துவதற்காக காணி அமைச்சிற்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் இழப்பீட்டினைச் செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்றிருக்காததுடன் அதற்கிணங்க உரிய காணி முறைப்படியாக நீதி அமைச்சினால் பொறுப்பேற்க்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி இலக்கம் 21, மில்ஸ் வீதி, கொழும்பு 12 என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான காணியில் 2.4281 ஹெக்டயர் அளவான காணியை இந்த அமைச்சினால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் தற்பொழுது அக்காணியின் ஒரு பகுதியை பயன்படுத்தும் அதிகாரம் இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பயன்படும் உரிமையை பொறுப்பேற்றதனைத் தவிர சுவீகரிக்கும் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் இழப்பீட்டு தகமையினைப் பரீட்சித்துப்பார்த்தல் பிரதேச செயலகத்தினால் முடிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுப் பணத்தை பிரதேச செயலகத்திற்கு விடுவித்த உடன் இழப்பீட்டினைச் செலுத்தலினை முடிவுறுத்தி உரிய ஆதனத்தை இந்த | ஆதனத்தை அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | நீதி அமைச்சு, சட்டவரைஞர் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்திற்குரிய காணியின் திட்ட வரைபடத்தின் பிரதியைப் பெற்று காணியை பொறுப்பேற்கும் நடவடிக்கையினை முடிவுறுத்தியிருக்கவில்லை. | இந்த ஆதனம் சம்பந்தமாக உரிமையை உறுதிப்படுத்ததுகின்ற ஆவணத்தினை சமர்ப்பிக்காது மதிப்பீட்டு அறிக்கையினை வழங்க முடியாது என மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே உரிய காணியின் சட்டரீதியான உரிமையை இந்த அமைச்சினால் பெற்றுக்கொண்டதன் பின்னர் அக்காணி மற்றும் கட்டிடத்தின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டு அறிக்கையினை பெற்ற உடன் அப்பெறுமதியினை CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | ஆதனத்தை அமைச்சிற்குப் பொறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நீதி அமைச்சினால் பயன்படுத்தி வருகின்ற நுவரெலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள 0.2023 ஹெக்டேயர் அளவான காணி இரக்குவானை சுற்றுலா விடுதி அமைந்துள்ள 01 ரூட் 10 பேச்சர்ஸ் அளவான காணி மற்றும் பத்தரமுல்லை சிறுவர் உச்ச நீதிமன்றம் அமைந்துள்ள 0.1760 ஹெக்டேயர் அளவான காணியை பெறுப்பேற்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்காததுடன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவுமில்லை. | இக்காணிகளின் சட்டரீதியான உரிமையை (ஒப்படைப்பு சான்றிதழ்) இந்த அமைச்சினால் பெறுப்பேற்றதன் பின்னர் அக்காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கும் மதிப்பீட்டு அறிக்கையை பெற்ற உடன் அப்பெறுமதியை CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | காணிகளை துரிதமாகப் பெறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 04 ஆண்டுகள் காலம் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட முச்சக்கர வண்டியை கணக்காய்வுத் திகதி வரையும் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டியானது 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 13.2 ஆம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு | துரிதமாக கைதவிர்ப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கைதவிர்ப்புச் செய்வதற்காக கைதவிர்ப்புக் குழு நியமிக்கப்பட்டு அது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | |
| (உ) | திறைசேரி முகாமைத்துவம் மற்றும் சிறைகைததிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கைக்கு இணங்க 160 அளவிலான பொருள் விடயங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளமுடியாத பொருட்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் அப்பொருட்களை கைதவிர்ப்புச் செய்து கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இப்பொருட்களுக்கு மத்தியில் இலத்திரனியல் கழிவுப் பொருட்களாக இனங்காணப்பட்ட 21 பொருடகளை 2021 ஆம் ஆண்டு ஒக்தோபர் 28 ஆந் திகதி அழிப்பதற்காக கிரீன் லின்க் (தனியார்) கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அப்பொருட்களின் பெரமதியும் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது திறைசேரி முகாமைத்துவ மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட மற்றும் ஏலத்தில் விற்கப்பட்ட (நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இனங்காணப்பட்ட) பொருட்களை CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அகற்றுவதற்காக நாட்குறிப்பு பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.<br><br>2021 ஆம் ஆண்டில் இலத்திரனியல் கழிவுப்பொருட்களாக அழிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இனங்காணப்பட்ட விடயங்கள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நீக்குவதற்காக நாட்குறிப்பு பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நீக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2011 சனவரி 18 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க நீதி அமைச்சு | பிணைகளை பதிவுசெய்யும் சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்வதற்காக | சுற்றிக்கையின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| சுற்றிக்கையின் பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிணை வைத்திருக்கவில்லை. | அமைச்சு உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணைப்பணத்தை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

### 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 08 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் அவற்றில் 05 வாகனங்களின் நட்டம் ரூபா 1,673,076 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 03 வாகனங்கள் சம்பந்தமாக நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த அனைத்து வாகனங்கள் சம்பந்தமாகவும் நிதிக்கூற்றுக்கள் படிவத்தின் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் கூற்றில் (குறிப்புi) இல் ii - இன்னும் அறவீடு செய்ய வேண்டியுள்ள அல்லது பதிவழிப்பதற்கு உள்ள அல்லது விட்டுவிடுவதற்கு உள்ள நட்டங்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் சம்பந்தமாக நி.பி 104 இற்கு இணங்க நியமிக்கப்பட்ட புலனாய்வுக் குழுவினால் இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் நட்டங்களை பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சரியாக கணக்கீடு செய்து உரிய பதிவினை ஈடுபடுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>ஒரு டேமாட்டார் வாகனத்திற்கு 2022-11-20 ஆந் திகதி எற்பட்ட விபத்து சம்பந்தமாக காப்புறுதி கம்பனியால் காப்புறுதி இழப்பீட்டினை வழங்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | அனைத்து நட்டங்களையும் நிதிக்கூற்றுக்கள் படிவத்திலுள்ள நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) 04 வாகனங்கள் தொடர்பாக ரூபா 165,670 தொகையான நட்டத்தை அறவீடு செய்தல்கள் நிதிக்கூற்றுக்களின் படிவம் குறிப்பு (i) இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு மோட்டார் வாகனங்கள் தொடர்பான நட்டமானது வாகன விபத்து ஏற்பட்ட ஆண்டிலேயே நிதிக்கூற்றுக்களின் குறிப்பு I இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நட்டத்தை அறவீடு செய்தல் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (I) இல் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏனைய வாகனங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்தல் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். இன்னும் இரண்டு மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக நீதி அமைச்சு செயலாளரின் அங்கீகரத்தினைப் பெற்று முறைப்படியாக கணக்கீடு செய்து உரிய பதிவினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (II) இல் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றிற்கு ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட ரூபா 85,978 தொகையான வாகன நட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் காட்டப்பட்டுள்ள பதிவழிக்கப்பட்ட நட்டங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு I நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வாறான பதிவழித்தல்களை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (II) ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | பதிவழிக்கப்பட்ட வாகன நட்டம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (II) இல் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நீதியை நிலைநாட்டுதல் தொடர்பான நடைமுறையினை வலுப்படுத்துவதற்காக அமைப/20/1400/330/013 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒரு விசேட பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஒரு விசேட நடவடிக்கையான சிவில் | சிவில் சட்டத்தினை மறுசீரமைப்புச் செய்யும் குழுவின மூலம் அனுபிவைக்கப்பட்ட கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கையானது இணையவழி (E-Mail) முறைமையினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளத | செல்முன்னேற்ற அறிக்கைகளின் கடினப் பொருள் பிரதியை பெற்று கோவை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தினை மறுசீரமைப்புச் செய்வதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஆலோசனைக் குழு அங்கத்தவர்ககளுக்காக 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 7,238,875 செலுத்தப்பட்டிருந்தும் அதன் செயல்முன்னேற்ற அறிக்கையை முறைப்படியாக கையொப்பமிட்டு உறுதிப்படுத்துதல் செய்யப்பட்டிருக்கவில்லை. | னால் கையெப்பமிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | அமைப/20/1400/330/013 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட விசேட பிரிவிற்காக பல்நேக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணியிலிருந்து உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு சிபாரிசு செய்திருந்தும் அந்த சிபாரிசினை கருத்தில் கொள்ளாது 07 உத்தியோகத்தர்கள் அதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 895,609 செலுத்தப்பட்டிருந்ததுடன் விசேட பிரிவும் செயற்படவில்லை. | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இணங்க நிதி அமைச்சின் அவதானிப்பில் செயலாற்றல் படையணி திணைக்களத்திடமிருந்து காணப்படுகின்ற வெற்றிடங்களுக்குத் தேவையான ஊழியர்களை வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அதற்காக ஊழியர்கள் கிடைக்காமையின் காரணமாக அமைச்சு செயலாளரின் தலைமையில் 2020-10-21 ஆந் திகதி நடைபெற்ற விசேட பிரிவின் குழுக்கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க புதிய ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டடார்கள் என தெரிவிக்கப்பட்டது. | முறைப்படியாக ஊழியர்களை சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 02 மாடிகளைக் கொண்ட புத்தளம், சட்ட உதவி மற்றும் சமூக சீர்திருத்த கட்டிடத்தினை | இந்த அறிவிட வேண்டிய செயலாற்றல் பிணை மற்றும் முற்பணத்தை | வேலை ஆரம்பிக்கும் முற்பணம் மற்றும் செயலாற்றல் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கும் வேலை 2010 ஒக்தோபர் 15 ஆந் திகதி வெளித்தரப்பினர்களுக்கு ரூபா 5,583,770 ஒப்பந்த பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 மார்ச் 27 ஆந் திகதி வேலை முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 03 சந்தர்ப்பங்களின் போது அதன் காலம் 2022 ஒக்தோபர் 13 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் இச்செயற்திட்டத்தின் வேலைகள் முடிவுறுத்தப்படாது நிர்மாண வேலை இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக சமூக சீர்திருத்த குற்றவாளிகளை ஆலோசனைக்கு உட்படுத்துதல், மற்றும் அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தனியான ஒரு அலுவலகத்தினை ஸ்தாபிக்கும் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த ஒப்பந்தக்காரருக்கு 2010 ஒக்தோபர் 21 ஆந் திகதி செலுத்தப்பட்ட வேலை ஆரம்பிக்கும் முற்பணத்தில் ரூபா 254,691 தொகையும் செயலாற்றல் பிணையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 339,535 தொகையும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் எதிர்காலத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | பிணையிலிருந்து அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நீதி அமைச்சின் 12 வாகனங்கள், ஏனைய நிறுவனங்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சின் மூலம் தற்காலிகமாக ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு மத்தியில் கடற்றொழில் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தை மீள ஒப்படைக்குமாறு தெரிவித்து கடிதம் வழங்கப்பட்டுள்ளது. | வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவையை விட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 795,902 தொகையான | வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 552,517 தொடர்பாக இரண்டு நபர்களுக்கு பதிவுத்தபாலின் மூலமும் | அறவிடப்படாது காணப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. | பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தர் மூலமும் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க ஒரு நபரிடமிருந்து கடனை அறவீடு செய்வதற்காக வாழைத்தோட்ட பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இன்றுவரை வாழைத்தோட்ட பொலிசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. இன்னுமொரு நபருக்கு எதிராக உச்ச நீதிமனறத்தில் ஒரு வழக்கு இடம்பெறுகின்றது.<br><br>சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதி ரூபா 233,405 (238,395-4,990) இந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தேவையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உரிய தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஆளணியில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 16 உத்தியோகத்தர்கள்களும் மூன்றாம் மட்டத்திலுள்ள 08 உத்தியோகத்தர்களும் இரண்டாம் மட்டத்திலுள்ள 40 உத்தியோகத்தர்களும் ஆரம்ப மட்டத்திலுள்ள 16 உத்தியோகத்தர்களும் வெற்றிடமாகக் காணப்பட்டனர். | வெற்றிடமான பதவிகளுக்கு மத்தியில் நீதி அமைச்சினால் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவையில் ஆட்சேர்க்கும் மீளாய்வுக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அங்கீகாரத்தினை வழங்கிய உதவி செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. ஏனைய பதவி வெற்றிடங்கள் சம்பந்தமாக அப்பதவிகளின் நியமன அதிகாரிக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | 02 மொழிபெயர்ப்பு (சிங்களம் - ஆங்கிலம்) பதவிகள் மற்றும் 01 நிழற்பட நுட்பவியலாளர் பதவி மிகையாகக் காணப்பட்டது. | மொழி பெயர்பாளர் (சிங்களம் - ஆங்கிலம்) 02 மிகைப் பதவி சம்பந்தமாக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நிழற்பட நுட்பவியலாளர் மிகைப் பதவியானது முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் DMS/CM/05-Vol II ஆம் இலக்க 2023-05-16 ஆந் திகதிய கடித்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | மிகைப் பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 2007 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலிருந்து இரண்டு நிழற்பட நுட்பவியலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அந்த 02 பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 02 நிழற்பட நுட்பவியலாளர் பதவிகளானது முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் DMS/CM/05-Vol II ஆம் இலக்க 2023-05-16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | உரிய பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |